மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது கட்டப்படுகின்ற கட்டிடம் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டிசம்பர் 1978-லே அனுமதிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் 1979—80லே துவங்கப்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நிரந்தர மில்லாத இடத்தில் இருப்பதால், ஆகஸ்ட் 21ஆம் தேதி காலி செய்யவேண்டும். தற்சமயம் உள்ள கட்டிடத்தில் 4 வகுப்புகள் தான் நடத்த முடியும். மீதியுள்ள வகுப்புகளுக்கு இடம் கிடையாது. எனவே, டெம்பரரி ஷெட்டுகள் அமைப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அந்த வகையிலே அங்கே வகுப்புகள் துவங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

வடாற்காடு மாவட்டத்தில் மதிய உணவு வினியோகம்

* வினா எண் 83—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மதிய உணவை எடுத்துச் செல்ல எத்தனை ஒன்றியங்களில் வேன்கள் உடயோகப்படுத்தப் படுகின்றன?

(ஆ) அவைகள் போதுமானதாக உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம: (அ) 36

(ஆ) ஆம்.

[முற்பகல் 9·30]

திரு. பெ. சு. திருவேங்கடம்: ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக் கூடங்களில் வான்கள் மூலமாக துவக்கப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு உணவு எடுத்துச் செல்லப்படுகிறது. அடிக்கடி வான்கள் பழுதடைந்து மாதக் கணக்கில் பழுது பார்க்காமலே நிறுத்திவிடுகிறார்கள். சைக்கிள்களில் மாட்டு வண்டிகளில் எடுத்துச் செல்வதன் காரணமாக உணவு தரமாக இல்லாமல் குழந்தைகள் உடல் நலம் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைப் போக்க அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

1980 ஜூலை 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேன்கள் மூலமாகவும் மதிய உணவு அனுப்பப்பட்டு வருகிறது. நெடுந்தொலைவு காரண மாக கண்டிப்பாக உந்து வண்டிகளைப் பயன்படுத்தித் தீரவேண்டிய இடங்களிலும் இன்றியமையாத் தேவை அளவுக்கு மட்டும் உந்து வண்டிகள் இனி பயன் படுத்தப்படும். இப்புதிய முறையை முழுவதும் செயல்படுத்தியபின் மைய சமையற்கூடங்களில் பெரும் அளவு சிக்கனம் ஏற்படும் என்ற குறிப்பைத் தந்திருக்கிறார்கள். இதன்படி சைக்கிள்களையும் மாட்டு வண்டிகளையும் தக்க முறையில் பயன்படுத்த நாம் நட வடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறோம். வேன்கள் ரிப்பேர் ஆகி பல நாட்கள் பழுது பார்க்கப்பட்டு வர காலம் ஆகிற காரணத்தால் இவைகளைப் பயன்படுத்துவது நல்லது என்ற கருத்தின் அடிப்படையிலும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறோம். குறிப்பிட்ட பள்ளிக்கு ஒரு வண்டி என்ற முறை வருகிறபோது வேலை வாய்ப்பும் ஏற்படுகிறது. எண்ணெய், டீசல் நெருக்கடி ஏற்பட்டு வருகிற சூழ்நிலைகளில் இதுபோன்ற முறைகளை நாம் ஊக்குவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: பெட்ரோல் வண்டிகள் ஓடுவ தால் அதிகச் செலவு அரசுக்கு ஏற்படும் என்ற காரணத்தால் டீசல் வேன்களாக மாற்ற அரசு உத்தேசிக்குமா? விரைவாக இந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது இருக்கின்ற வேன்கள் பழுதடைந்திருக்கின்றன என்றால் அவற்றைச் சரி செய்யவும் மற்றக் காரியங்களைச் செய்யவும் அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. நாம் இப்போது சொல்வது புதிய திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்பது. புதிய திட்டத்தின் மூலம் வேன்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மாட்டு வண்டி கள், சைக்கிள்களைப் பயன்படுத்துவதால் பல பேருக்கு வேலை வாய்ப்புத் தருவதோடு டீசல், பெட்ரோல் உபயோகத்தையும் குறைக்க வழி ஏற்படும்.

திரு. த. வேணுகோபால்: தற்போது பள்ளிகளுக்கு மதிய உணவு காலம் கடந்து எடுத்துச் செல்லப்படுகிறது. மாட்டு வண்டி கள் மூலம் எடுத்துச் சென்றாலும் அல்லது சைக்கிள் மூலம் எடுத்துச் சென்றாலும் துரிதமாக காலதாமதம் இன்றி வழங்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு பள்ளிக்கு ஒரு வண்டி என்ற வீதத்தில் ஏற்பாடு செய்ய விரும்புகிறோம். அந்தந்த ஊர்களில் இருக்கும் வண்டிகளைப் பயன்படுத்த விரும்புகிறோம். எங்கிருந்து எடுத்துக் கொண்டு போக வேண்டுமோ அங்கே பக்கத்தி லிருந்தே எடுத்துக் கொண்டு போகவும் ஏற்பாடு செய்கிற

காரணத்தால் தாமதமாகப்போவது தவிர்க்கப்படும். தாமதமாகப் போவதைத் தவிர்க்க அரசு வேறு பல முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இப்படி வேன்களில் உணவை எடுத்துக் கொண்டு போகிற முறை நீண்ட காலமாக இருக்கிறதா? இந்த முறை எங்களைப் போன்றவர்களுக்குப் புதிதாகத் தெரிகிறது. மற்ற ஜில்லாக்களில் அமல் நடத்தப்படுகிறது என்றால் எந்த அடிப் படையில் இந்தத் திட்டம் அமல் நடத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் மைய சமையற் கூடங்கள் இருக்கின்றன. அந்த மாவட்டங்களிலே 97 மைய சமையற்கூடங்கள் இருக்கின்றன. அங்கிருந்து உணவு எடுத்துச் செல்ல இந்த வேன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. மு. ஜான் வின்செண்ட்: மதிய உணவு வழங்குவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிற செக்குகள் கால தாமதம் ஆகிறது. உடனடியாக செக்குகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி விவரங்கள் இல்லையென்றாலும் அரசு தாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மதிய உணவுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு வேளைக்கு 15 பைசா கொடுக்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது. அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிய உணவை வேன்களில் எடுத்துச் செல்வதைப் பற்றிய கேள்வி இது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர் கள் பதிலிலிருந்து வேன்களை அறவே நிறுத்தி மாட்டு வண்டிகளிலும் சைக்கிள்களிலும் இந்த மதிய உணவை அனுப்பலாம் என்று அரசு யோசித்திருப்பதாகத் தெரிகிறது. தற்காலிகமாக அப்படி சைக்கிள்களிலும் மாட்டு வண்டிகளிலும் உணவை எடுத்துச் சொல்லும்போது உணவு கெட்டுவிடுகிறது என்று நாங்கள் சொல்லுகிறோம். ஆகவே புதிய திட்டத்தைக் கைவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். புதிய திட்டத்தைக் கைவிடவேண்டும் என், உத்திரவு போடா தீர்கள்.

1980 ஜூலை 31]

திரு. பெ. சு. திருவேங்கடம்: 15 மைல்கள் தூரத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது, மாட்டு வண்டியிலே எடுத்துச் செல்லப்படுவதால் விடியற்காலையிலேயே எடுத்துச் செல்கிறார்கள், அதன் காரணமாக உணவே கெட்டுவிடுகிறது. ஆகவே வேன் திட்டத்தையே நல்ல முறையிலே செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. நாம் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஒரு புதிய முறையைக் கையாண்டு வருகிறோம். காலப்போக்கிலே அதிலே குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களைய முன்வருவோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியபோது 15 மைல்கள் போவதால் உணவு கெட்டுவிடுகிறது என்ற நிலையைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி எடுத்துச் செல்கிறபோது அந்த உணவில் சூடு பாதுகாக்கப்படுகிற வசதிகளையெல்லாம் செய்துதான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உலக சுகாதார கழகம் இத்த உணவை எடுத்துச் செல்வதற்கு ஏதாகிலும் வசதிகள் கொடுத்து உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைப்பற்றி என்னிடத்திலே குறிப்பு இப்போது இல்லை.

ஒன்றியங்களில் விதைப்பொருட்கள் வழங்கல்

*வினா எண் 84—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஒன்றிய அலுவலகங்களிலுள்ள விவசாய அபிவிருத்தி நிலையங்களில் உரிய காலத்தில் பருவத்திற்கு தகுந்தாற்போல் விதைப்பொருட்கள் வினியோகிக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பரிசீலித்து அந்தந்த பருவத்திற்கு தகுந்த விதைப் பொருட்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.